பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564,566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 14 புதன்கிழமை (31 - 10 - 2001) தொலைபேசி: 3378 ஒலி 324

## பருத்தித்துறைக் கடற்பரப்பில்
# எண்ணெய்க் கப்பல் மீது
# கடற் கரும்புலிகள் தாக்குதல்

## 14 படையினர் பலி, கப்பல் எரிகிறது!

(பாதுகாப்புச் செய்தியாளர்)

**திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை பலாலி படைத்தளத்திற்கு எரிபொருள்களை ஏற்றிக்கொண்டு சென்ற "எம்.பி.ஷெல் பிறைற்" என்ற தனியாருக்கு சொந்தமான கப்பல் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்கரும் புலி அணியின் மின்னல் வேக அதிரடித்தாக்குதலில் வெடித்துச் சிதறி தீப்பற்றிக் கொண்டது.**

**விடுதலைப் புலிகளின் கரும்புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் 12 இராணுவத்தினரும், இரண்டு கடற் படையினரும் கொல்லப்பட்டதாகவும் மூவரைக் காணவில்லை எனவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.**

யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் தேவைக்கென சுமார் 101 தொன் மண்ணெண்ணெய், 201 தொன் எஞ்சின்ஒயில், 275 தொன் டீசல், ஆகியவற்றுடன் திருமலையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு காங்கேசன் துறை நோக்கிப் புறப்பட்டுவந்த எண்ணெய்க் கப்பலொன்றே பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற் கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

நேற்று மாலை 5 30 மணிக்கு பருத்தித்துறைகடற்பரப்பில் 12 கிலோ மீற்றர் தொலைவில் இந்த அதிரடித் தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 12 இராணுவத்தினரும், இரண்டு கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ள அதேவேளை தாக்குதலில் வெடித்துச் சிதறிய இக்கப்பல் இச் செய்தி எழுதும் வரை எரிந்துகொண்டிருப்பதாகத் தகவல்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் றெஜி கைது

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் அமைச்சர் றெஜிரணதுங்கா நேற்று கம்பஹா பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில்விடுவிக்கப் பட்டுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் கொலை தொடர்பாக கம்பஹா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்ததை அடுத்தே றெஜிரண துங்காவை கம்பஹா பொலிசார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவித்தனர். (வ)

## குண்டு வெடித்ததை மக்கள் நேரில் கண்டனர்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று மாலை கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான 'எம். பி ஹெல் பிறைற'என்ற எண்ணெய்க்கப்பல் வெடித்து சிதறிய போது இடியுடன் கூடிய மின்னல் ஒன்றுபளிச் செனத் தெரிந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட பருத்தித்துறை கடற்கரை வாசிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கப்பல் வெடித்து மின்னல் கிளம்பிய சொற்ப நேரத்தில் மற்றுமொரு இடிமின்னல் தென்பட்டதாகவும், அதைத்தொடர்ந்து கடற்பரப்பு ஒரேபுகை மண்டலமாகக் காட்சி அளித்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## தேர்தலில் பொ. ஐ. மு. தோற்றால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்!
### முன்னாள் அமைச்சர் திஸநாயக்கா

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மைப் பலத்தை பெறத்தவறினால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பதவி விலகவேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுக் காலை திஸநாயக்கா பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

பொதுத்தேர்தலில் பொது ஜன ஐக்கியமுன்னணி பெரும்பான்மையை இழக்குமா

## பிரதிநிதித்துவத்தை குறைக்க ஹக்கீம் முயற்சி
### முஸ்தபா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைத்து விடுவதற்கு முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறார் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் மாயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாயோன் முஸ்தபா மேலும் தெரிவித்திருப்பதாவது,

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம், செயற்பாடுகளை கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாகவைப்ப

[08ம் பக்கம் பார்க்க]

## முக்கோண போட்டி இறுதியாட்டம் இன்று

பலத்தைப் பெற்றிருந்தால், ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா பதவி விலகவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

திஸநாயக்கா பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார்.

அம்மாநாட்டில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜன் ஐக்கியமுன்னணி பெரும்பான்மையை இழக்குமானால் ஜனாதிபதி குமாரதுங்க கௌரவமான முறையில் தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு பதவி விலக வேண்டும் அதுவே அவருக்குச் சிறந்தது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியே ஆட்சியமைக்குமென்றும் திஸநாயக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ)

# இறுதியாட்டம் இன்று

## யாழ. -வவுனியா அணிகள் மோதும்

(யாழ்ப்பாணம)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்குஇடையிலான முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதவுள்ளது.

மேற்படி இரு அணிகளிலும் இடம்பெறும் வீரர்கள் விபரம் வருமாறு,

**யாழ். மாவட்ட அணி**

ஏ.எஸ் நிஷ நதன், (தலைவர்) என்.சுதேஸ்குமார் (உப தலைவர்), என் சிவராஜா, ரி.கௌரிபாலன் கே.சசிகரன் ,ஆர்.சார்ஜஜான், எஸ் விம்லன், எஸ் லக்சுமிகாந்தன்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# குண்டு வெடித்த பகுதி நேற்று சுற்றிவளைப்பு

(கொழும்பு)

கொழும்பு நாரஹென்பிட்டிய தொடர்மாடி ''சித்திரா லேன்'' குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி நேற்று இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. சித்திராலேன் தொடர்மாடிப் பகுதிக் குடியிருப்பாளர்கள் பூங்கா ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிர சோதனையின்பின் வீடு

(8-ம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கவின் பிரசாரக் கூட்டம் நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நல் லூர் கந்தசாமி கோவில் முன்றலில் கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(08 ம் பக்கம் பார்க்க)

# கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு கப்பல் முற்றாக சிதறடிக்கப்பட்டது!

## 4 கரும் புலிகள் வீரச்சாவு - புலிகள் அறிவிப்பு

யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா படையினரின் பாவனைக்கு எரிபொருட்களை திருமலையிலிருந்து காங்கேசன்துறைக்குஏற்றிக் கொண்டு வந்த கப்பல் மீது விடுதலைப் புலிகளின் கடற்புலி அணி வெற்றிகர அதிரடித் தாக்குதலில் கப்பல் முற்றாக அழிக்கப்பட்டதென புலிகள் நேற்று நள்ளிரவு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; நேற்று மாலை 5 15 மணிக்கு தாக்கி அழிக்கப்பட்ட கப்பலில் 244 மெற்றிக் தொன் டீசலும, 260 மெற்றிக் தொன் மண்ணெண்ணையும, 275 மெதான் என்ஜின் ஒயிலும் இருந்ததாகவும தெரிவிக்கப்படுகிறது இந்த எண்ணெய்க் கப்பலில் பயணம செய்த அனைத்து கடற்படையினரும், இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். கடற்படையினரின் பதில் தாக்குதலை முறியடித்த கடற் புலிகள் இரண்டாவது கட்டமாக எரிபொருள் கப்பலுடன் கரும்புலித்தாக்குதலை மேற்கொண்டு கப்பலை சிதறடித்ததாகவும் அந்தஅறிக்கையில்

(8ஆம் பக்கம் பார்கக)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

**O/L ENGLISH**
MODEL PAPER
OCTOBER - 2001

பயிற்சி நிச்சயம் பலன் தரும் O/L ஆங்கில மாதிரிவினாத்தாள்
யாழ்ப்பாணம் பூபாலசிங்கம், மானிப்பாய் நாயகபாலன் உட்பட அனைத்து புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். ரூபா: 10/- மட்டுமே. ஆசிரியர் K. சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (3902)


## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று. யாழ் மாவட்டச் செயலகத்தில் நாளை பி.பகல் 3.30 மணிக்கு நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல கலாசார உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் கேட்டுள்ளார். (இ-09-19)

## ஐ. தே. க. வை...

யனரால் சுற்றிவளைக்கப்பட்டதுடன் எமது வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் உட்பட பல உறுப்பினர்கள் படையினரால் கடும் தாக்குதல்களுக்குள்ளாகினர்.

இவை எல்லாவற்றையும் நன்கு தெரிந்திருந்தும் தெரியாதவர்கள்போல் நடந்து கொள்ளும் கூட்டணியினரும் அதன் உபதலைவருமான ஆனந்தசங்கரிக்கு தேர்தலின் பின்பு மீண்டும் கூட்டுசேர்ந்து இயங்கலாம் என்று இப்போது கூறுவதற்கு, தேர்தலில் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக்கொள்ளவே இந்த நான்கு கட்சிக்கூட்டு என்று நாம் கூறியதைத்தவிர வேறு அர்த்தம் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

(உ)

# விடுதலைப் புலிகளின் போராட்டமே தமிழ்மக்களுக்கு விடிவைத் தரும்!

## பத்திரிகையாளர் மாநாட்டில் மகேஸ்வரன்

தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக சிங்களப்பாராளுமன்ற உறுப்பினர்களும் சிங்களமக்களும் ஏற்றுக்கொள்வதற்கும் அவர்களின் போராட்டத்தால் தான் தமிழ்மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்பதை வெளிக்காட்டுவதற்குமாகவே நான் ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக யாழ் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

இவ்வாறு ஐ தே கட்சியின் யாழ்மாவட்ட முதன்மை வேட்பாளர் தியாகராஜா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மகேஸ்வரன் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார்.

அம்மாநாட்டில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்.

பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தால மட்டும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

இன்று இரட்டைவேடம் பூண்டுநிற்கும் கூட்டணியினர் இதுவரை எதனைச் சாதித்தனர். சிங்களவர்களுடன் சேர்ந்து கொண்டு இரட்டை வேடம்பூண்டு செயற்படுகின்றனர்.

பாராளுமன்றத்தில் கூட்டணியினர் பத்துத்தடவைகளுக்கு மேல் குரல்எழுப்பியபோதும் ஒருதடவையாவது விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகள் என்று கூறியதுகிடையாது.

அதில் கூறுவதை தவிர்த்துவிட்டு இன்றுகூட்டுச்சேர்ந்து எதனைச் சாதிக்கப்போகிறார்கள்?

ஆயிரம் பேர்வரையானோரை வெட்டிக்கொலைசெய்த சுரேஷ் பிறேமச்சந்திரன் கூட்டணியினருடன் இன்றுகூட்டுச்சேர்ந்து கொண்டுவிடுதலைப் புலிகளின் பெயரைக்கூறி தேர்தலில் ஓட்டுக்கேட்கிறார்.

ரெலோ அமைப்பு வவுனியா உட்பட பல இடங்களில் வரி அறவிட்டுவருகிறது அத்துடன் ஆயுதக் குழுவாகவும் சேர்ந்துஇயங்கி வருகிறது.

உண்மையில் வெட்கப்படவேண்டிய விடயங்கள் இவை.

ஈ.பி.டி.பியினர் தமக்கு தாங்களே கள்ளவோட்டுப் போட்டு ஆ' சி'பீட'' ஏறினர் அமைச்சர் நிதிஒதுக்கீடு என்ற பெயரில் ஊ ரையு உலையும் ஏமாற்றி நிதிதிரட்டுகிறார்கள் வெளிநாடுகள் அபிவிருத்திக்கென வழங்கிய பணத்தையே இவர் அள்ளி வீசுகிறார்.

இவற்றுக்கெல்லாம் மிக விரைவில் கணக்குக் காட்ட வேண்டிய அவலநிலைவரும். வேலைவாய்ப்பு என்றபோர்வையில் பட்டதாரிகள் வெளியேநிற்க படிப்பறிவற்றவர்களுக்கு அரச தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இது மிகவும் வேதனைதரும் விடயமாகும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி யாழ் மாவட்டத்தில் நான்கு ஆசனங்களை நிச்சயம் கைப்பற்றும். இதன் ஊடாக:

★ உடனடி யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படும்.
★ அரசு புலிகள் பேச்சு வார்த்தை இடம் பெறும்.
★ பொருளாதார தடை நீக்கப்படும்.
★ யாழ்ப்பாணம் போதனா

(08ம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம் - மாநகரசபை

# சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் -2002

கீழ்க்காணும் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகளை 01: 01: 2002 முதல் 31. 12. 2002 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்படிவங்களை படிவக்கட்டணம் ரூபா 250/- உடன் பண்டங்கள் சேவைகள் வரி ரூபா 31. 25 ஐயும் சேர்த்து செலுத்துவதன் மூலமும், கீழ்க்காணப்படும் கேள்விப் பிணைப்பணமும் செலுத்துவதன் பேரில் 12. 11. 2001 ஆந் திகதி திங்கட்கிழமை பி ப. 3. 00 மணி வரையும் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை யாழ் மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் எதிர்வரும் 13. 11 2001 ஆந் திகதி பி. ப. 2. 00 மணிக்கு முன் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் 13. 11 2001 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள்யாவும் 13. 11. 2001 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

## விபரம்

| குத்தகை விபரம் | கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை ஜி. எஸ்.ரி. நீங்கலாக) |
|---|---|---|
| **சந்தைகள்:** | | |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 5000 | 32,000.00 |
| 2 கொட்டடி மீன் சந்தை | 5000 | 2210000. 00 |
| 3. பாஸையூர் சந்தை | 2500 | 36100 00 |
| 4. அரியாலைச் சந்தை | 3000 | 126000. 00 |
| 5. கொழும்புத்துறை சந்தை | 1000 | 2200. 00 |

| இறைச்சிக்கடைகள் | இல | கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜி எஸ்.ரி.நீங்கலாக) | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 06 | 2500 | 44000 | 195 |
| 2. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 02 | 2500 | 9600 | 200 |
| 3. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 04 | 2500 | 6100 | 200 |
| 4. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 05 | 2500 | 8100 | 200 |


## வலம்புரி சிறுகதைப் போட்டி

விபரங்களை நாளைய இதழில் எதிர்பாருங்கள்

## காணத்தவறாதீர்கள்!

யாழ். மண்ணில் முதல்முறையாக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும்

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அனுசரணை யுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும்

## விபுலானந்தன் ஞாபகார்த்த
# மின்னல் வேக கூடைப்பந்தாட்ட
# சுற்றுப் போட்டி

**பிரதம விருந்தினர்**
**பேராசிரியர் வி. நவரட்ணராஜா**
(ஓய்வு பெற்ற பொறியியல் பேராசிரியர்)

**சிறப்பு விருந்தினர்**
**கலாநிதி சி. வி. செல்லையா**
(அதிபா உடுவில் மகளிர் கல்லூரி)
**திருவாளர் கே. கணேசநாதன்**
(இணைப்பாளர், உடற்கல்வி அலகு யாழ். பல்கலைக்கழகம்)

**காலம்:-** இன்று 31. 10. 2001 புதன்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

**இடம்:** உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந் தாட்ட ஆடுகளம்

இதுவரை கூடைப்பந்தாட்டத்தில் யாழ்.மண் கண்டிராத விறுவிறுப்பையும் வேகத்தையும் காட்ட 11 அணிகள் ஒரே ஒரு நாளில் மோது கின்றன.

போட்டி அமைப்பாளர்கள்

(3899)

| | | | | |
|---|---|---|---|---|
| கடை | 02 | 2500 | [illegible] | [illegible] |
| 3. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 04 | 2500 | 6100 | 200 |
| 4. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 05 | 2500 | 8100 | 200 |
| 5. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 06 | 2500 | 5300 | 200 |
| 6. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 07 | 2500 | 9700 | 200 |
| 7. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை | 08 | 1500 | 3700 | 200 |
| 8. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 09 | 1500 | 5000 | 200 |
| 9. நாவாந்துறை மாட்டிறைச் சிக்கடை | 10 | 1500 | 5000 | 200 |
| 10. நாவாந்துறை கருவாட்டுக்கடை | 11 | 1000 | 3000 | 200 |
| 11. நாவாந்துறை சருவாட்டுக்கடை | 12 | 1000 | 3000 | 200 |
| 12. அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500 | 17100 | 135 |
| 13. அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500 | 36400 | 135 |
| 14 பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500 | 48500 | 135 |
| 15. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 2500 | 35500 | 135 |
| 16. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500 | 32500 | 135 |

**குறிப்பு;** ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் நிலுவைப் பணம் செலுத்த வேண்டியவர்களும் கேள்விப்படிவம் பெற அருகதை அற்றவர்களாவர்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29-10-2001.

(C 2804)

# இனவாதத்தால் கண்டி இராஜதானி வீழ்ந்தது

# இன்றைய இலங்கையின் சாபக்கேடும் இதுவே!

கண்டி, இராச்சியத்தின் இறுதி நாயக்க வம்சத்து மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் 1815 ஆம் ஆண்டில் காட்டிக் கொடுப்பு மூலம் வெள்ளையர்களால்சிறைப்பிடிக்கப் பட்ட மன்னர் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு, இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் மரணமடைந்தார்;

இன்றும் சில வரலாற்றுஆசிரியர்கள மன்னரைக், கல்நெஞ்சம் படைத்தவனாக சித்திரித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட மன்னர் இறுதியாகத் தன் உரையை வெள்ளையர்கள் முன்னிலையில் நிகழ்த்தினார்.

முக்கியமான, ஆனால் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இதனைக் களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் டி.பி. குமாரதுங்கவெளிக் கொண்டு வந்தார்; அதன் தமிழாக்கமே இது.

இனவாதமே கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக்காரணமானது என்பதை இவ்வுரை பறைசாற்றுகின்றது.

கண்டிய சிங்களப் பிரதானிகள் என்னைக் காட்டிக் கொடுத்ததையிட்டு அவர்களை நான் குறை கூறவிரும்பவில்லை. அவர்கள் என்னைப் பற்றித் தவறாக நினைத்து விட்டனர். நான் மன்னனாக முடி சூடிக் கொண்ட நாளிலிருந்து பிலிமதலாவை நிலமே, தன் குறுகிய எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள எனக்குத் துரோகமிழைத்தான்; இது விடயமாக நீண்டகாலம் எனக்குத்தெரியாமல் இருந்தது,

பின்னர்சிறிது சிறிதாகநான் இதை அறிந்து கொண்டேன். இதன் பின் நான் அவனை அழைத்து இரகசியமாக எச்சரிக்கை செய்தேன். என்றாலும் அவனுடைய துரோகங்கள் அதிகரித்தன: பின்னர் அவனை அழைத்து விசாரணை நடத்தினேன். அங்கே அவனுடைய குற்றங்கள் ஒப்புவிக்கப்பட்டன என்றாலும் மன்னிப்பு வழங்கி அவனை விடுதலை செய்தேன்.

என்னிடத்தில் உப அதிகாரியாகப் பணியாற்றிய அரவ்வாவுல என்னை அழிக்கத்திட்

> **கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் 1815ம் ஆண்டில் காட்டிக் கொடுப்பின் மூலம் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த வேளை வெள்ளையர் முன் ஆற்றிய உரை.**

டம் தீட்டுவதாகப் பிலிமதலாவ என்னிடம் கூறினான்; காரணம் அவன் என் எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தவன். சில வேளைகளில் தர்க்கங்கள் ஏற்பட்ட போதிலும் அவன்மீது கொண்டிருந்த நம்பிக்கையை நான் தளர்த்தவில்லை அரவ்வாவுல என்னையும்இந்த இராச்சியத்தையும்காப்பாற்றப் பாடுபட்டான்.

இதை உணர்ந்து கொண்ட அந்தத் துரோகிகள் அவனை இரகசியமாகக் கொலை செய்யத் திட்டம் தீட்டினர். ஒரு நாள் அரவ்வாவுலவைக் கொல்ல நான் ஆணையிட்டது போன்ற போலிப் பத்திரத்தை தயாரித்து மரண தண்டனை நிறைவேற்றுபவனிடம் கொடுத்துள்ளனர். அரவ்வாவுலவும் மன்னன் கட்டளை என எண்ணி மரணத்திற்கு முகங் கொடுத்தான்.

கண்டி வாவி அமைக்கப் படும் போது மக்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படுமென பிலிமதலாவை மக்களிடையே பிரசாரஞ் செய்தான். மக்களும் இதை நம்பினார்கள். மக்களின் சுகாதாரத்திற்காகவும், நகரை அழகுபடுத்த எண்ணியுமே நான் இந்தக் குளத்தை அமைத்தேன் நான் சிங்களவர்களுக்கு எதிரானவன் என்ற பிரசாரத்தையும் அவன் முன்னெடுத்தான், நான் வேற்றுநாட்டு அரசவம்சத்தவன் என்றபடியால் மக்களும் அதை நம்பினார்கள்.

இனவாதமும் எமது இராச்சியம் சிதற ஒரு காரணம் எனநான் நினைக்கின்றேன். பிலிமதலாவை நிலமேயின் மஹா அதிகாரம் பதவியினால் எனக்கும். நாட்டிற்கும் பிரயோசனமில்லை என உணர்ந்த நான் அவனை அப் பதவியில் இருந்து நீக்கினேன்.

அல்லேபொல நிலமேசிறிது காலம் நம்பிக்கையாகச் செயற்பட்டு வந்தவன். பின்னர் அவனும் துரோகிகளின் எண்ணங்களுக்கு அடிமையாகி விட்டான். இப்படியான நிலை தொடர்ந்து நிலவினால் எமது இராச்சியம் சிதறும் என நான் அன்றே எச்சரித்தேன்; எனது எச்சரிக்கையை விட அவனுக்குத் துரோகிகளின் எண்ணங்கள் இனிப்பாக இருந்தன.

ஒரு நாள் இரகசியமாக அவனது துரோகத்தனங்களுக்கு மன்னிப்பு அளித்தேன். பின்னரும் அவன் துரோகிகளுடன் இணைந்து எனக்கு எதிராகச் செயற்பட்டான். அவனைக் கண்டியில் இருந்து வெளியேற்றினால் நிலைமை சீரடையும் என நினைத்த நான், அவனைச்சப்ரகமுவப் பகுதிக்கு மண்டலேஸ்வரப் பதவிக்கு நியமித்தேன் பின்னரும் நான் அவன் மீது நம்பிக்கை வைத்திருந்தேன். சில

## நாதன்

நிலமேக்கள் என்னைப் பாதுகாக்க துணிந்தமையும் உண்மை.

இந்நேரத்தில் சிலர் என்னை அழிக்க முயல்வதாக அறிந்தேன். இதனால் எனக்குத் தூக்கம் வருவதும் இல்லை. என்னோடு இருந்த பிரதானிகள் இதற்கு மதுவை மருந்தாகப் பழக்கினர் பின்னர் மதுப்பாவனை என்னை ஆட்கொண்டது. எமது இராச்சிய வீழ்ச்சிக்கு மதுவும் ஒரு காரணம்.

அல்லேபொல அரச பதவிக்கு ஆசைப்படுகின்றான் என்ற செய்தி ஏனையவர்கள் மூலம் தெரிய வந்தது இதனால் நான் மி வேதனையுற்றேன் சப்ரகமுவமக்கள் அவன் பேச்சை நம்பியிருப்பதாகத் தெரியவந்தது.

அவன் குடும்பத்தினருக்குத் தண்டனை வழங்க வேண்டும் எனப் பலர் என்னிடம் கூறினர் நான் இதை ஏற்கவில்லை. என்றாலும் அல்லேபொல நிலமேயின் பரமவைரியான புள்ஸல்ல மூலம் இந்தத் தண்டனைகளை வழங்க நான் உந்தப்பட்டேன்.

ஒரு நாள் நான் மது போதையில் இருந்த வேளை அல்லேபொல குடும்பத்தினருக்கு வழங்க வேண்டிய தண்டனை எழுதப்பட்ட ஓலையை அவன் எதிரி ஒருவன் என்னிடம் கொண்டு வந்தான்; அதை என்னிடம் தந்தான் மதுபோதையில் நான் அதில் கையொப்பமிட்டேன். இது எப்படியிருந்த போதிலும் இராஜத்துரோகக் குற்றச்சாட்டுக்கு வழங்கப் பட வேண்டிய தண்டனையே அது:

''ஆங்கில சட்டப்படி இராஜத்துரோகிகளுக்குத் தண்டனை கொடுக்காமல் விடுவார்களா?'' எனக் கேட்ட மன்னர் ''நான் ஒரு போதும் சட்டத்தை மீறவில்லை. இது என் மனச்சாட்சி அமைதிப் பட போதுமானது'' எனக் கூறிதன் உரையை முடித்துக் கொண்டார்.

**தகவல்: துரையர்**

## இராசி பலன்

31-10-2001
ஐப்பசி 14, புதன்
சதுர்த்தசி மு. ப. 11.01
ரேவதி மு. ப. 7.44
இராகுகாலம் 12.03-1.33
சுப நேரம் 4.03-6.33
பூரணை விரதம்

**மேடம்**
பெரியோர் மதிப்பு, நண்பர்கள் உதவி, கடும் முயற்சி, அமைதியான நிலை.

**இடபம்**
வாக்கு மேன்மை, பிரயாண கஷ்டம், முயற்சி தாமதம், தொழில் நன்மை.

**மிதுனம்**
பொருள் சேர்க்கை, குடும்ப சுகம், காரிய நன்மை, உறவினர் வருகை

**கடகம்**
அதிக பிரயாசை, முயற்சி கைகூடும், அதிகாரம் கௌரவம்.

**சிங்கம்**
தனலாபம், புதிய சிந்தை, மனச் சஞ்சலம், காரியம் கைகூடும்.

**கன்னி**
பிரயாண பயம், வீண் மனஸ்தாபம், முயற்சி தடங்கல், உடல் வியாதி.

**துலாம்**
உறவினர்சந்திப்பு, போசன சுகம், காரிய அனுகூலம், செல்வாக்கு.

**விருச்சிகம்**
தொழில் விருத்தி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், சந்தோசமான சம்பவம்.

**தனுசு**
வியாபார நன்மை, உடல் சோர்வு, காரிய தாமதம், கேளிக்கை.

**மகரம்**
ரோக பயம், பெரியோர் மனஸ்தாபம், கல்வி சிறப்பு, முயற்சி தாமதம்.

**கும்பம்**
நினைத்தகாரியம்கைகூடும், கீர்த்தி, பொருள் சேர்க்கை, அந்நியர் சந்திப்பு.

**மீனம்**
வீண் செலவு, உறவினர் மனஸ்தாபம், முயற்சி தாமதம், திடீர் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**


## மக்கள் வங்கி

### கேள்விப் பத்திர அறிவித்தல்
### பாவித்த மோட்டார் வாகனங்கள் விற்பனை

பின்வரும் வாகனங்களை விற்பதற்கான விலைக் கோரிக்கைகள் கோரப்படுகின்றது.

**50-6117 இலக்கமுடைய மஸ்டா வான்**
**31-8966 இலக்கமுடைய மிற்சுபிசி ஜீப்**

வட வலய உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி 79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பெறப்பட்ட படிவங்களில் விலைக் கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக் கோரிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களும் நிபந்தனைகளும் கேள்வி மனுக்களுடன் வழங்கப்படும்.

திருப்பிப் பெறாத கட்டணமாக ரூபா 250/- செலுத்தி 2001-11-21 ஆம் திகதி பி. ப. 2.00 மணி வரை கேள்வி மனுவுக்கான பத்திரங்களை மக்கள் வங்கி, வடவலய உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே திருப்பிப் பெறக் கூடிய கட்டணம் ரூபா 5000/- ம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது செலுத்தப்படல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
மக்கள் வங்கி,
வட வலய அலுவலகம்
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2601-021-2602
021-2956
தொலைநகல்: 021-2602-021-2956
30-10-2001

[C-2793]

குறிப்பு: 28-10-2001 ந் திகதி வலம்புரியில் பிரசுரமான விளம்பரத்தில் 50-6177 இலக்கமுடைய மஸ்டா வான் என்பதை 50-6117 இலக்கமுடைய மஸ்டா வான் எனத் திருத்தி வாசிக்கவும்.

[C-2802]


# இலங்கை அணிக்கு புதிய அனுசரணையாளர்

(கொழும்பு)

இலங்கைகிரிக்கெட் அணிக்குப்பிரதான அனுசரணையாளராக செயற்பட டில்மா எனும் பெயரில் தேயிலை ஏற்றுமதிசெய்யும் எம்.ஜே.எவ் நிறுவனம்ஒப்பந்தம் செய்துள்ளது.

ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் மூன்று வருட காலத்திற்கு இந் நிறுவனம் அனுசரணை வழங்கும்.

இதற்காக டில்மா நிறுவனம் 33இலட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு வழங்கியுள்ளது.

1995 தொடக்கம் 'சிங்கர் நிறுவனமே இலங்கைஅணிக்கு அனுசரணை வழங்கிவந்ததும் 98இல் புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் கடந்த செப்ரெம்பர் மாதம்30ஆம்திகதியுடன்முடிவடைந்தமையால் புதிய விண் டில்மா நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைச் சம்பவம் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட வெற்றுத்தோட்டாவின் வகையையும், பாவிக்கப்பட்ட துப்பாக்கியின் வகையையும், அப்போது அருகில் இருந்த காவலரனில் கடமையில் இருந்த படையினரின் அறிக்கையையும் பெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் சமர்ப்பிக்கும் படி யாழ். நீதிமன்ற நீதிபதி இ த.விகனராஜா உத்தரவிட்டுள்ளார்.

# க. பொ த. (உ|த) பரீட்சை புள்ளி மதிப்பீட்டாளர் செயலமர்வு இரு தினங்கள்

(மந்திகை)

க: பொ. த. உயர்தரப் பரீட்சை புள்ளி மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் புள்ளி மதிப்பீட்டாளர்களுக்கான செயலமர்வுஎதிர்வரும் 2 ஆம், 7 ஆம் திகதிகளில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புவியியல் பாடபுள்ளி மதிப்பீடும், 7 ஆம் திகதி புதன்கிழமை அளவையியல் பாடபுள்ளி மதிப்பீடும் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்த மதிப்பீட்டாளர்களை குறித்த தினைக்களங்களில் நடைபெறவுள்ள செயலமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (செ-23)

# அச்சுவேலி ஆஸ்பத்திரியில் மாதாந்தம் 60 பேர் பூரான் கடிக்கு சிகிச்சை

(நவக்கிரி)

அச்சுவேலி அரசினர்ஆதார வைத்தியசாலையில் பூரான் கடிக்குச் சிகிச்சை பெறுவோர் அதிகரித்திருப்பதாகவைத்திய அதிகாரி எஸ். விமலேந்திரன் தெரிவித்தார்.

இந்த வகையில் மாதாந்தம் 50 தொடக்கம் 60 பேர் பூரான் கடிக்குச்சிகிச்சைபெற வருவதாகவும்,

பாம்புக் கடிக்கு இலக்காகி குறைந்தது 7 பேர்மாதாந்தம் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ 223)

# விதவைப் பெண்களுக்கு சுயதொழில் முயற்சிகடன்

(நவக்கிரி)

பொதுசன மாதாந்த உதவிப்பணம்பெறும்கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த விதவைப் பெண்கள் 15பேருக்குசுயதொழில் முயற்சிக் கடனாக 10 ஆயிரம் ரூபா அண்மையில்வழங்கப்பட்டது.

50 வயதிற்கு உட்பட்ட மேலும் 25 விதவைப் பெண்களுக்கு மேற்படி சுயதொழில் முயற்சிக்கடன் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கடனுதவி மூலம், கால்நடைவளர்ப்பு, சிறுகடை அமைப்பு, தையல் தொழில் போன்றவற்றை மேற்கொண்டு அவர்தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதேஇத் திட்டத்தின்இலக்காகும. (உ-233)

# வீதித்திருத்தத்திற்கு பொலிஸார் ஒத்துழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக கோபுரத்தினைச் சுற்றியுளள வீதிகள புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு ஏதுவாக வேம்படி வீதியில் அமைந்திருந்த வீதித் தடையை பொலிஸார் தற்பொழுது அகற்றியுள்ளனர்.

இதேவேளை, புனரமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் நவம்பர் மாத இறுதிப் பகுதியில் திறந்து வைக்கப்படவிருப்பதையடுத்தே இத் திருத்த வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

எனினும், யாழ் பொலிஸ் நிலையம் இப்பகுதியில்அமைந்துள்ள காரணத்தினால் மணிக்கூட்டுக்கோபுர வீதி இன்னமும் மக்கள் பாவனைக்கு விடப்படாமை குறித்தும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-10)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்டோபர்மாதம் 29ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 179729 ஏ | 179729 பி |
| 179729 சி | 179729 டி |
| 179729 ஈ | 212747 ஏ |
| 212847 ஏ | 212847 பி |
| 212848 ஏ | 212899 ஏ |
| 212918 ஏ | 212970 ஏ |
| 212971 ஏ | 212672 ஏ |
| 214238 ஏ | 214238 பி |
| 214268 ஏ | 214270 ஏ |
| 214312 ஏ | 214312 பி |
| 214410 ஏ | 214518 ஏ |
| 214526 ஏ | 214533 ஏ |
| 214558 ஏ | 214558 பி |
| 214577 ஏ | 214577 பி |
| 214604 ஏ | 214604 பி |
| 214604 சி | 214604 டி |
| 214604 ஈ | 214623 ஏ |
| 214623 பி | 214673 ஏ |
| 215864 ஏ | 214888 ஏ |

**வேலணை**

16312 ஏ

**ஊர்காவற்றுறை**

| | |
|---|---|
| 16101 ஏ | 16110 ஏ |
| 16174 ஏ | 16265 ஏ |
| 16885 ஏ | 16285 ஏ |
| 16285 பி | 16285 சி |
| 16185 டி | 16285 ஈ |
| 16285 எப் | 16295 ஏ |
| 16265 பி | 16323 ஏ |
| 16323 பி | 16324 ஏ |
| 16339 ஏ | 16343 ஏ |
| 16343 ஏ | 16370 ஏ |
| 16371 ஏ | 16371 பி |
| 16377 ஏ | 16377 பி |
| 16277 சி | 16377 டி |
| 16377 ஈ | 16377 எப் |
| 16390 ஏ | 16390 பி |
| 16390 சி | 16399 டி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 138186 ஏ | 208904 ஏ |
| 210960 ஏ | 211033 ஏ |
| 212931 ஏ | 212931 பி |
| 212931 சி | 212931 டி |
| 212932 ஏ | 214247 ஏ |
| 212247 பி | 214250 ஏ |
| 214104 ஏ | 214405 பி |
| 214487 ஏ | 214488 ஏ |
| 214489 ஏ | 214522 ஏ |
| 21452 : பி | 214622 சி |
| 214522 டி | 214648 ஏ |
| 214649 பி | 214660 ஏ |
| 215976 ஏ | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 208287 ஏ | 212499 ஏ |
| 212499 பி | 212499 சி |
| 212865 ஏ | 214222 ஏ |
| 214222 பி | 214222 சி |
| 214222 ஈ | 214300 ஏ |
| 214303 ஏ | 214303 பி |
| 214353 ஏ | 214370 ஏ |
| 214402 ஏ | |

(தொடரும்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# 2002ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

(பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள். இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பனவற்றை 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முப்பத்தொராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2001. 11. 16 ஆம் திகதி ந. ப. 12 .00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் உப அலுவலகங்களில் உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப்படிவ பணத்துடன் பு. சே. வரி ஐயும் சேர்த்துச் செலுத்துவதின்பேரில் 2001. 11. 15 ஆம் திகதி பி. ப. 2 00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களைத் தயாரித்து ''தலைவர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்'' என்ற முகவரிக்குக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிட்டுப் பதிவுத்தபால் மூலம்2001. 11 16 ஆம் திகதி ந ப 12 00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்தின் முன்னர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும்: கேள்விப்பத்திரங்கள் 2001. 11. 16 ஆம் திகதி பி. ப. 2. 00 மணிக்குப் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ. பிரதிநிதியோ சமுகம் அளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர் அடையாள அட்டையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடைகள் நடத்துவதற்குக் காணி சொந்தக்காரிடமிருந்து ஒப்பந்தக்கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி விண்ணப்பிக்காவிடின் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் நேரத்துக்கு முன்னதாகச் சபைக்கு ஒப்படைக்க வேண்டும் அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரமுண்டு. சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியில் 3% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும, நிபந்தனைகளையும் பிரதேசசபையின் தலைமைச் செயலகத்தில் மற்றும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## அட்டவணை

| குத்தகையின் விபரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜி.எஸ் ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **1. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1. மானிப்பாய் பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 620,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை, மானிப்பாய் | 400 | 300 | 1500 | 225,000/- |
| 3. ஆட்டிறைச்சிக்கடை. மானிப்பாய் | 300 | 300 | 1500 | 65,000/- |
| 4. கருவாட்டுக்கடை, மானிப்பாய் | 200 | 300 | 1500 | 6.000/- |
| **2. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. காக்கைதீவு சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 15,000/- |
| 2. நவாலி பிரசாத் சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 87,000/- |
| 3. சாவற்கட்டு சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 100,000/- |
| 4. நவாலி பிரசாதி சந்தை மாட்டிறைச்சிக் கடை | 400 | 300 | 1500 | 42,000/- |
| 5. நவாலி பிரசாதிசந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 300 | 300 | 1500 | 15,000/- |
| 6. ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக் கடை | - | 300 | 1500 | 150,000/- |
| 7. ஆனைக்கோட்டை சந்திஆட்டிறைச்சிக்கடை | - | 300 | 1500 | 25,000/- |
| **3. பண்டத்தரப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. பண்டத்தரிபபு பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 176,000/ |
| 2. பண்டத்தரிப்புச் சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250 | 300 | 1500 | 42,000/- |
| 3. பண்டத்தரிப்பு சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250 | 300 | 1500 | 16,000/- |
| 4. பண்டத்தரிப்பு சந்தை, கருவாட்டுக் கடை, இல 01 | 250 | 300 | 1500 | 7,000/- |
| 5. பண்டத்தரிப்பு சந்தை, கருவாட்டுக் கடை, இல 02 | 250 | 300 | 1500 | 7,000/- |
| **4. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1 மாசியப்பிட்டி பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 67,000/- |
| 2. இளவாலை பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 46,000/- |
| 3. மாதகல் பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300 | 1500 | 15,000/- |
| 4. மாசியப்பிட்டி சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250 | 300 | 1500 | 16,000/- |
| 5. மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250 | 300 | 1500 | 10,000/- |
| 6. இளவாலை சந்தை, மாட்டிறைச்சிக்கடை | - | 300 | 1500 | 15,000/- |
| 7. மாதகல் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 250 | 300 | 1500 | 7,500/- |
| 8. மாதகல் சந்தை, மாட்டிறைச்சிக்கடை | 250 | 300 | 1500 | 15,000/- |

முக்கிய குறிப்பு:- அத்துடன் கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள், சேவைகள் வரியான 12.5%ஐயும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், ஜே. பி. யு. எம்
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம், மானிப்பாய்.
2001. 10. 26

(C-2801)

### று ஒரு தகவல்

## வீரத் தாயின் வேதனை

ஐப்பானியத் தாய்ஒருத்தி தன் மூன்று மகன்களுக்கும் வீர உணர்வூட்டி அவர்களைப் பெரிய வீராகளாக உருவாக்கினாள். மூவருமே அந்த நாட்டுப்படையில் சேர்ந்தனர். நாட்டைக்காக்கும் டணியில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஒருநாள் எதிரி நாட்டுவீரர்களால் தாக்கப்பட்டு அவளின் மூத்தமகன் வீரமரணமடைந்தான்' என்ற செய்தி அவளுக்குக் கிடைத்தது. அந்தத்தாயோ இதைக்கேட்டுச் சிறிதும் கலங்கவில்லை. நாட்டின் பெருமையைக் காக்கும் மகனைப் பெற்றதற்காகமகிழ்ச்சி அடைகின்றேனேதவிர அவன் இறந்ததற்காகச் சிறிதும் வருந்தவில்லை என்றாள் அவள்.

சிலநாட்கள் சென்றன. இரண்டாவது மகனும் போரில் பெருவீரம் காட்டி இறந்துவிட்டான் என்ற செய்தி கிடைத்தது. இப்பொழுதும் அந்த தாய் என் மகனை பெற்ற பொழுதைவிட இப்பொழுது தான் நான் பெரிதும் மகிழ்கின்றேன். அவன்தன் தாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்துவிட்டான் என்றாள். மூன்றாவது மகனும் போர்க்களத்தில் இறந்துவிட்டான் என்ற செய்திவந்தது. ஊர்ப்பெரியவர்கள் அந்தத் தாயிடம் உனக்கு ஏற்பட்ட அவலம் யாருக்கும் ஏற்படக்கூடாது. இரண்டு மகன்களை இழந்த போதும் ஓரளவு தாங்கிக் கொண்டாய். தாங்கமுடியாத துன்பம் வந்துவிட்டதே என்று ஆறுதல் சொன்னார்கள்.

அதற்கு அவள் அழுது கொண்டே, என் கடைசி மகனும் இறந்துவிட்டானே என்பதற்காக நான் அழவில்லை நாட்டிற்கு ஏதேனும் ஆபத்து வந்தால் அதைக்காக்க நான் பெற்ற மகன்கள் வேறுயாரும் இல்லையே. நான் என்ன செய்வேன்? என்று புலம்பினாள் அந்த வீரத்தாய். □

பேராசிரியர் எ. சோதி

# ஜே. வி. பி. மகாநாயக்கர்களிடம் ஆசீர்வாதம் கேட்பது ஆச்சரியம்

### நிரஞ்சன் விஜயரத்னா

(கொழும்பு)

தலதா மாளிகையை ஜே. வி. பி தான் முதன் முதலில தாக்கியது. அங்கேவைத்துப் பலரைக் கொலைசெய்தது. அவர்கள் மகாநாயக்கர்களிடம் ஆசிர்வாதம் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. எனினும் அவர்களுககு நாம் மன்னிப்பு கொடுபபோம். சிங்கள, பௌத்த மக்களுக்கு ஒருசக்தி கிடைப்பதறகாக நான் பிரார்த்திக்கின்றேன்.

சிஹல உறுமயகட்சியின் தோதல் பிரசாரத்தினை ஆரம்பிக்கும் நோக்குடன் அதன் உறுப்பினர்கள் தலதா மாளிகைக்கும் அஸ்கிரிய பௌத்த பீடத்திற்கும் அண்மையில் விஜயம் செய்தபோது அவர்கள் முன்னிலையில் பேசுகையில் கண்டி தலதா மாளிகை தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்னா மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில்; ஜே. வி. பியினர் வாக்குரிமையைப் பறிக்காது சுதந்திரமாக ஜனநாயக முறையில் வாக்களிகக இடமளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் பேசுகையில்; நாம் கட்சிக்காகவன்றி பௌத்தர்களாக ஒன்றிணைவோம். எமக்குத் தேவை இந்த நாட்டுக்காகச் சேவை செய்யும் அரசாங்கம் மட்டுமே.

சிஹல உறுமய பிரமுகர் திலக் கருணாரத்னா பேசுகையில் நாம் சிங்கள பௌத்தர்களுக்காகச் சேவைசெய்யவே இந்தத் தேர்தலைச் சந்திக்கின்றோம். எமது பௌத்தத்தைக் காப்பாற்ற வேண்டும். வடக்கு-கிழக்கு யுத்தம் நாட்டையும் பொருளாதாரத்தையும் சீரழித்துவிட்டது என்றார். (எ)

## பொலிஸாரை தாக்கிவிட்டு தப்பி ஓடிய இருவர் கைது

(நாவலபபிட்டி)

நாவலப்பிட்டி பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடடிருந்த தம்மைதாக்கி விட்டு தபபியோட முயன்ற இருவரைத் தாம் கைது செய்துளளதாக பொலிஸார் அறிவித்துளளனர்.

கடந்த புதன் கிழமை இடம்பெற்றஇச்சமபவததில், சோதனைச் சாவடியில் பஸ் வண்டியைச் சோதனையிட முற்பட்ட பொலிஸாரை கண்டபடி தாககிவிட்டு இருவரும் தப்பியோடினர். இவர்களைத் துரத்திப்பிடிக்க முயன்ற பொலிஸார் தோல்விகண்டனர்.

பின்னர் உடனடியாக ஸ்தலத்திற்கு மேலதிக பொலிஸார்வரவழைக்கப்பட்டுதேடுதல் நடத்தியதன் காரணமாக மகாவலிகங்கைக் கரையிலுள்ள மூங்கில் பற்றை ஒன்றிற்குள் மறைந்திருந்த இவர்கள இருவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களைத் தீவிர விசாரணைக்கு உடபடுத்தியுள்ளனர். (உ-5)

## இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெலிஓயாவுககு வடக்கே நிக்கவேவாப பகுதியில் கடந்த 25 ஆம் திகதி ரோந்து சென்ற படையினர் விடுதலைப் புலிகள் சிலரை எதிர்கொண்டு தாக்கியதாகவும் இச் சமபவத்தில் புலிகள் தரபபில் இருவர் உயிரிழந்ததாகவும ஊடகத் தகவல் மையம விடுதத அறிக்கையில் தெரிவிக்கபபட்டுளளது. (உ)

## சேவை நலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பிராநதிய மேறபார்வை பொதுச்சுகாதாரபபரிசோதகர்சிததரவேலஇராஜேநதிராவின் சேவை நலன பாராட்டு விழா இன்று காலை 9.00 மணிககு யாழ்இந்துக்கல்லூரி குமாரசுவாமி மணடபததல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பொதுச்சுகாதாரப்பரிசோதகர் சங்கத் தலைவர் க. தெய்வேந்திரம தலைமையில நடைபெறவுளள இவ் விழாவில்நல்லை ஆதீனகுருமகாசன்னிதானம் ஆசியுரை வழங்குவார். இசை நிகழ்ச்சிகளும இடம்பெறும. (எ)

## மத்திய பேருந்து நிலைய பணிகள் வழமைக்கு

(கொழும்புத்துறை)

வடபிராநதிய போக்குவரததுச் சபையின் பேருந்து சேவைகள மீண்டும் மதிதிய பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபட ஆரமபிததுள்ளன.

மத்தியபேருந்துநிலைய புனரமைப்புக்காக கடந்த சில வாரங்களாக பேருந்து சேவைகள்காங்கேசன்துறை வீதியிலிருந்தும்வைரவர் கோவில் வீதியிலிருந்தும் சேவையிலீடுபட்டுவந்தமை தெரிந்ததே.

புனரமைக்கப்பட்ட பேருநது நிலையம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டதையடுத்து மீண்டும் நேர அட்டவணைப்படி பழைய இடத்திலிருந்து சேவையிலீடுபட ஆரம்பித்துள்ளன.

இதனால் காங்கேசன்துறை வீதியில் ஏற்பட்டிருந்த நெரிசல்கள் குறைந்துளளதையும் அவதானிக்க முடிகின்றது. (உ-223)

### நிவாரண விநியோகம் தொடர்பாக

## கிளை முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பிவைபபு

(யாழ்ப்பாணம்)

நிவாரண விநியோகம் சம்பந்தமாக கடந்த மாதம் 21ஆம திகதி வடககு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டகளஸ் தேவானந்தாவின் அலுவலகததில் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுககப்பட்ட முடிவுகள தீர்மானங்கள் தொடர்பாக கூ. அ. உ. ஆணையாளரால் வலி கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கத் தலைவருக்கு அனுப்பி வைககப்பட்ட சுற்று நிருபத்தில் கூறப்பட்ட விடயங்கள் சமபநதப்பட்ட சகல கிளைமுகாமையாளர்களும் அறிதலுக்காக அனுபபி வைக்கபபட்டுள்ளது.

★ பிரதி மாதமும் 5ஆம் திகதுக்கு முன்பதாக சமபநதப்பட்ட மாதத்தின் நிவாரணப்பொருடகளை வழங்கி முடிக்கப்படல வேண்டும்

★ வழங்கபபடும் நிவாரணப் பொருடகள தரமானதாகவும் சரியான அளவிலும்வழங்கப்படுவதை உறுதிபபடுத்தல் வேணடும்.

★ மொதத நிலையத்திலிருந்து விநியோகிக்கபபடும் நிவாரணப் பொருட்களில் ஏதாவதுதரக் குறைவுகாணப்படுமிடத்து அது தொடர்பாக உடனடியாக அறியத் தருவதுடன் தரக்குறைவான பொருட்கள் கிளைக்கு வழங்கப்படடிருந்தால்எக்காரணம கொண்டு அதனைப் பாவனையாளர்களுக்கு வழங்கக்கூடாது. ஆகியன உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் அதில் உள்ளடக்கபபட்டுள்ளன. (உ-9)

## முழுநிலா கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முழுநிலாக் கருத்தரங்கு இன்று பி. ப. 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிகுமாரசுவாமி மணடபத்தல் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில், ''தேர்தலும் சமாதானமும்'' எனும்பொருளில் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு அ. பி. ஜெயசேகரம் அடிகளார் கருத்துரை வழங்கவுள்ளார். (உ-223)

## பணியாளர் பயிற்சி வகுப்பு

(யாழ்பபாணம்)

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தினால் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளைப்பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு வலி கிழக்கு தென்பகுதி ப. நோ கூ. சங்க மண்டபததில் இன்று காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் அ. க. த கிருஷ்ணராசா தலைமையில் நடத்தப்படவுள்ளது. (உ-9)

## சேதங்களை மதிப்பிட படையினர் இடையூறு

(மந்திகை)

சாவகச்சேரிநகரப்பகுதியில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த வர்த்தக நிலையங்களின் சேதவிபரங்களை மதிப்பிடச்சென்ற மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரிகளை படையினர் திருப்பி யனுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது;

521வது படையணியின் அனுமதி பெற்றேஅங்குகடந்த ஞாயிறன்று சென்றதாகவும் இருப்பினும்கைதடியில்உள்ள சிவில்நிர்வாக அலுவலகத்தில அனுமதிபெற்று வருமாறு அவர்களை திருப்பியனுப்பியதாகவும் தெரியவந்துளளது; (உ-23)

## சாவகச்சேரி நீதிமன்றங்கள் பருத்தித்துறையில் இயங்குவதாக அறிவிப்பு

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்டஇடப்பெயர்வின்பின்னர் துன்னாலை, தம்பசிட்டி ஆகிய பகுதிகளில் இயங்கிய சாவகச்சேரி மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத்தின ஒரு பகுதியில் இயங்குவதாக அந்தந்த நீதிமன்றப் பதிவாளர்கள் தெரிவித்துள்ளனர்;

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் அவசிய அவசர சிவில் வழக்குகள் மாத்திரம் ஏற்கப்படும் எனவும் அது தொடர்பாக பொதுமக்கள் சட்டத்தரணிகள் தம்மிடம் தொடர்பு கொளளுமாறும் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் கந்தையா நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் பழைய வழக்குகள் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுமென்றும் இவற்றுடன் தொடர்புடையவர்கள நீதிமன்றுடன் தொடர்புகொள்ளுமாறும் சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளர் சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார். (உ)

### சோக்கல்லோ சண்முகத்திற்கு

## கதம்ப அரசு பட்டம் வழங்கி கௌரவிப்பு

(யாழ்பபாணம்)

ஏழாலை 'சோக்கல்லோ' த. சண்முகநாதனின் கலை இலக்கிய செயற்பாடுகளைப் பாராட்டி சுன்னாகம கலை இலக்கிய அன்பர்கள் 'கதம்ப அரசு' எனும் பட்டத்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளனர். இக் கௌரவிப்பு வைபவம் கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் கிழக்கில் நடைபெற்றது.

கவிஞரும் 'வலம்புரி' பத்திரிகை உதவி ஆசிரியருமான சு. துரைசிங்கம் (துரையர்) இப்பட்டத்தை வழங்கிக் கௌரவிததார்: அங்கு நாடக நடிகர் வே. நவரட்ணம் உரையாற்றுகையில்:-

சுன்னாகம் பகுதியில் பல நாடகங்களில் எம்முடன் சேர்ந்து நடித்த 'சோக்கல்லோ' சண்முகநாதன் நகைச்சுவை நடிப்பில் முதல் பரிசு பெற்றவர் இன்று அகில இலங்கை ரீதியில் புகழ் பூத்த கலைஞர்களுள் ஒருவராக விளங்குகிறார் என்றார்.

நடிகர் செல்வநாயகம் பேசுகையில்:- தொலைக்காட்சி, வானொலி, நாடகங்களிலும் நேர்முக வர்ணனைகளிலும் தளராத குரல் வளத்துடன் நீண்ட காலமாக செயற்பட்டு வரும் சண்முகநாதனின் சேவை பாராட்டுதற்குரியது.

ஒப்பனை ஒன்றின் போது எவனிடம் கூறைச் சேலை ஒன்றைக் கொடுத்து இது எனது உயிர்நாடி என்று அவர் குறிப்பிட்டது மனதில் இன்றும் பசுமையாக உள்ளது என்றார்.

உலகிலுள்ள ஏழைமக்களின் வாழ்வுக்குக் கிடைத்த பரிசாகவேநான் இவ்விழாவை கருதுகிறேன் என்று தனது பதிலுரையில் 'சோக்கல்லோ' சண்முகநாதன் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலை இலக்கியஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். (உ-106)

## சிந்தனைக்கு விருந்து

### நான் அல்லேன

'தொல்லரசெல் லாமடக்கித் தொல்லையர சாகிவரும்
வல்லரச தாமமெரிக் காவினைமுன் - செல்வழி
கண்டவன் யார்' என்னக் கலக்கமுற்ற மாணாக்கன்
'உண்மையில்நான் அல்லேன்' என் றான்.

'பழையவன்'

# அமெரிக்கா மீது மீண்டும் குண்டுத் தாக்குதல்?

## பொதுமக்களுக்குஎச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் இன்னும் சில நாட்களில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறலாம் என அமெரிக்கா அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்காவிலோ அல்லது வெளிநாடுகளில் உள்ள அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களின் மீதோ தாக்குதல்கள் நடைபெறலாம் என்னும் நம்பக் கூடிய தகவல்கள் கிடைத்துள்ளதாக மேற்படி எச்சரிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அமெரிக்க நாட்டு மக்களை மிகுந்த கவனத்துடன் இருக்குமாறும் வலியுறுத்தப் பட்டுள்ளது. (உ-2)

# வாஜ்பாய் - பிளேயர் கலந்துரையாடல்

(புதுடில்லி)

அமெரிக்காவில் ஐ நா· கூட்டத் தொடரில் கலந்து கொண்டுவிட்டு திரும்புகையில் வாஜ்பாய் இலண்டனில் தங்கிச்செல்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ நாவின் விசேடகூட்டத் தொடரில் அடுத்தமாதம்9, 10ஆம் திகதிகளில் கலந்து கொள்ளும் இந்தியப்பிரதமர் வாஜ்பாய் நாடு திரும்பும் வழியில் லண்டனில்தங்கிப் பிரதமர் ரொனி பிளேயருடன் கலந்துரையாடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தலிபான் அமெரிக்கபோர் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறுமென தெரியவருகிறது. (து)

# ஆப்கானியர் லண்டனில் தஞ்சம்

(புதுடில்லி)

ஆப்கான் நாட்டவர்கள் இருவர், பம்பாயில் இருந்து லண்டன் சென்ற 'எயர் இந்தியா' விமானத்தின் கழிவறையில் ஒளித்துச் சென்று கடவுச்சீட்டு, விசா எதுவுமின்றி லண்டன் சென்று புகலிடம் கோரியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (உ-2)

# ஐ. நா. கூட்டத்தில் ஜோர்ஜ்புஷ் முஷாரப் சந்தித்துப் பேச்சு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ் பாகிஸ்தானிய ஜனாதிபதி ஜெனரல் முஷாரப் உடன் எதிர்வரும் 10 ஆம் திகதி நியூயோர்க் நகரில் சந்தித்துப் பேச உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நியூயோர்க் நகரில் நடைபெற உள்ள ஐ.நா.வின் வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது, பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம், பிராந்தியப் பாதுகாப்பு, பொருளாதார கூட்டுறவு. 2002 இல் பாகிஸ்தானில் நடைபெற உள்ள பொதுத்தேர்தல், இருதரப்பு உறவுகள் பற்றி பேச்சு நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# அமெரிக்காவுக்கு இராணுவரீதியில் ஆதரவு வழங்க ஜப்பான் இணக்கம்

(காபூல்)

ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதலிற்கு அமெரிக்காவிற்கு இராணுவ ஆதரவு வழங்க ஜப்பான் தீர்மானித்துள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

ஜப்பான் ஏற்கனவே இராஜதந்திர தகவல் பரிமாற்றம் மற்றும் மனிதாபிமான உதவிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாகவும், இந்நிலையில் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்திற்கும் உதவ முன் வந்திருப்பது இருதரப்பு உறவுகளை மேலும் மலமாக்கும் என்றும் அமெரிக்காதெரிவித்துள்ளது. (உ-2)

# ஐ. தே. கவைஆட்சியில்அமர...

# தமிழ்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்தன

## புளொட் சித்தார்த்தன் சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் வரலாற்றை மறந்திருக்கலாம் ஆனால் தமிழர் அரசியலில் அண்மைக்காலங்களில் நடந்தநிகழ்வுகளையும் தனது செயலையும் சொன்ன விடயங்களையும் மறப்பதும் மறைப்பதும் கூட்டணியின் உப தலைவர் பதவியில் இருக்கும் வீ. ஆனந்த சங்கரிக்கு கொஞ்சமும் அழகல்ல.

ஜனநாயக மக்கள்விடுதலை முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன் விடுத்த பத்திரிகை அறிக்கையில்மேற்கண்டவாறு குறுப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

சாதாரணமான நேர்மையாக இருப்பின் அவரது பத்திரிகை அறிக்கைகளுக்கு நாம் கவனம் செலுத்தியிருக்கமாட்டோம். ஆனால்தற்போதைய நிலையில் அவரதும் அவரது கூட்டணியினதும் செயல்கள் செயற்பாடுகள் கடந்தகாலங்களில் பொதுவாக 1994 ஆம் ஆண்டிற்கு பின்னர், எப்படி இருந்தது? என்ன செய்தார்? ஏன் செய்தார்கள்? என்பது பற்றி அவருக்கும், எமது மக்களுக்கும் ஒரு சில விடயங்களை நினைவுபடுத்துவதுஇன்றைய நிலையில் எமது தலையாய கடமையாக உள்ளது.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்த ஆரம்பகாலத்தில்சுமார் 7 மாதங்களுக்கு மேலாக அவசரகாலச் சட்டம்பாராளுமன்றத்தில்எந்த வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்பட்டு வந்தது. இதே ஆனந்த சங்கரியின் தலைமையிலான கூட்டணி அந்த காலகட்டத்தில் அவசர காலச் சட்டத்தை எதிர்க்கவில்லை அவசரகாலச் சட்டம் நிறைவேற ஆதரவு கொடுத்தது என்பதுதானே இதற்கு அர்த்தம்.

சந்திரிக்கா அரசு அமுல்படுத்திய பத்திரிகைத் தணிக்கை காரணமாகவும்மேலும் பலசொந்தக் காரணங்களுக்காகவும்ஐக்கிய தேசியக் கட்சி அவசர காலச் சட்டத்தை எதிர்க்க முடிவெடுத்தது அதன் பின்னரே ஆனந்த சங்கரி தலைமையிலான கூட்டணியும் எதிர்க்க முடிவெடுத்தது.

எமது கட்சியும் எதிர்த்து வாக்களித்து வந்ததுஇருந்தும் அரசியல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்த சந்திரிக்காவின் முயற்சிகளுக்கு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக நாம் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதைத் தவிர்த்து வந்தோம்.

சந்திரிகா அரசின் முதல் இரண்டு வரவு செலவுத் திட்டங்களையும ஆனந்த சங்கரியும், அவரது கூட்டணியும் பரிபூரணமாக ஆதரித்திருந்தது. பின்னர்பாதுகாப்பு அமைச்சின்வரவுசெலவுத்திட்ட வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்திருந்தாலும், மொத்த வரவு செலவுத் திட்டவாக்கெடுப்பிற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்திருந்தனர்.

1994ம் ஆண்டு 77வீதமான தமிழ் மக்களது ஆணையைப் பெற்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபோது. மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், புலிகள் அரசுடன்பேசிக்கொண்டதன் காரணமாகவுமே இந்த கூட்டணி உட்பட நாமும் ஏனைய அமைப்புகளும் அரசை ஆதரித்தோம் என்பதை இந்த சிரேஷ்ட உப தலைவர் விளங்காமல்போனதுதான் அரசியல் அதிசயமாகும்.

கடந்த பாராளுமன்றத்தில் அரசைஆதரிப்பதிலும். எதிர்ப்பதிலும்கூட்டணி நிலையான யோக்கை கடைப்பிடிக்கவில்லை என்று சங்கரிக்கே நன்கு தெரியும். அரசுக்கு எதிரான ஐக்கிய தேசியக்கட்சியின் நம்பிக்கை இல்லாப் பிரேரணைநடவடிக்கைகளின் ஆரம்பத்தில், அரசியல் தீர்வு நடவடிக்கைகளை குழப்ப இடமளிக்கக்கூடாது எனக் கூறி நம்பிக்கையில்லாத் தீர்மமானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடாது எனவும் கூறியிருந்தனர்.

ஆனால் கட்சிக்குள் ஒருசில முக்கியஸ்தர்களின் முரண்பாடான போக்கு காரணமாகவே பின்பு ஆதரிக்க முடிவெடுத்தனர்.

இறுதியில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இடம் கொடாதவகையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் ஆனந்தசங்கரி உட்பட ரெலோ. அ. இ. த. காங்கிரஸ் தலைவர்களும் (நான்கு கட்சிக் கூட்டில் உள்ளோர்) ரணிலை ஆட்சிப்பீடம் ஏற்றவே ஒன்றுபட்டுள்ளோம் என்றுபகிரங்கமாக தமது ஒற்றுமைக்கூட்டின் எதிர்காலம் பற்றிய நிலைப்பட்டை தெளிவுபடுத்தி இருந்தனர். (ஆதாரம் 12-10 2001 தினக்குரல்)

ஆனந்தசங்கரியின் கூட்டணியுடன் கூட்டுச்சேர்ந்துள்ள ரெலோ அமைப்பு இன்றும் கூட வவுனியா படைத் தலைமை முகாமில் (ஜோசப் முகாம்) இருந்துதான் தமது உறுப்பினர்களுக்கு உணவுப் பொருட்களையும் பிற பொருட்களையும் கிரமமாக முழு அளவில் பெற்றுவருகின்றனர் என்பது. புளொட் அமைப்பைப்பற்றி அதிகம் தெரிந்தவர்போல் பேசுகின்ற சங்கரியாருக்கு நன்கு தெரியும். தெரிந்திருக்க வேண்டும். அதுபற்றி தெரியாதவர் போல் நடிக்க முற்படுகிறார்.

எமது கைகளில் உள்ள ஆயுதங்கள் பற்றியும், நாம் தங்கியுள்ள வீடுகள் பற்றியும் கேள்வி கேட்கும் சிரேஷ்ட தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் ரெலோ உறுப்பினர்களது கைகளில் உள்ள ஆயுதங்கள் பற்றியும், ஈ பி ஆர் எல். எவ். சுரேஸ் அணி உறுப்பினர்களின் ஆயுதங்கள் பற்றியும் அவர்கள் தங்கியுள்ள வீடுகள் பற்றியும் கேள்வி கேட்க ஏன் பயந்து நடுங்குகிறார் கேள்விகள்கேட்கக்கூடியஜனநாயகம் கூடஅங்கில்லையா? அல்லது அங்கு ஆயுதங்களைதாங்கிஅவர்கள் தங்கியிருப்பதெல்லாம்அவர்களது சொந்த வீடுகள் என்றும் நினைத்துவிட்டாரா?

கடந்த பாராளுமன்ற காலத்தில் எமது அமைப்புக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாதவிடத்திலும் தமிழினத்தின்மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக சகல போராட்டங்களிலும் பதினொரு கட்சி கூட்டமைப்பு சார்பிலும் வேறுவகைகளிலும் நாம் கலந்து கொண்டோம். இப்போராட்டங்களிற்கான பேச்சுவார்த்தைகளுக்கும் போராட்டங்களுக்குமான அழைப்பிதழ்களை இக்கூட்டணியும் சேர்ந்தே விடுத்திருந்தது.

இப் போராட்டங்களில் ஈடுபட்டதன் காரணமாக வவுனியாவிலும், மன்னாரிலும் எமது அலுவலகங்கள் படை

( 2ஆம் பக்கம் பார்க்க )

வழங்க ஜப்பான் தீர்மானித்துள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

ஜப்பான் ஏற்கனவே இராஜதந்திர தகவல் பரிமாற்றம் மற்றும் மனிதாபிமான உதவி

திற்கும் உதவ முன் வந்திருப்பது இருதரப்பு உறவுகளை மேலும் மலமாக்கும் என்றும் அமெரிக்காதெரிவித்துள்ளது.

(உ-2)

எமது கட்சியும் எதிர்த்து வாக்களித்துவந்ததுஇருந்தும் அரசியல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திற்கு

ரெலோ, அ. இ. த. காங்கிரஸ் தலைவர்களும் (நான்கு கட்சிக் கூட்டில் உள்ளோர்) ரணிலை ஆட்சிப்பீடம் ஏற்றவே ஒன்றுபட்டுள்ளோம்

இப் போராட்டங்களில் ஈடுபட்டதன் காரணமாக வவுனியாவிலும், மன்னாரிலும் எமது அலுவலகங்கள் படை

(2ஆம் பக்கம் பார்க்க)

### அப்துல் ஹக்கின்

## சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்க மறுப்பு

(இஸ்லாமபாத்)

தலிபான்களால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட எதிர்க் கூட்டணியின் படைத் தளபதியான அப்துல் ஹக்கின் சடலம்அவரதுகுடும்பத்தவரிடம்வழங்க தலிபான் மறுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

அப்துல்ஹக் அமெரிக்காவின் உளவாளி என்றும் அவரது சடலத்தை உறவினரிடம் கொடுத்தால்அமெரிக்காவிற்குஎடுத்துச்செல்லப்படும் என்றுகருதியேதலிபான்கள் சடலத்தை ஒப்படைக்கமறுப்பதாக ஹக் இன் சகோதரர் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-2)

### காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம்

## முன் அறிவித்தல் இன்றி செயலகம் முன் மறியற் போரில் குதிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து கடந்த 1996,1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பில் நீதி வழங்குமாறு கோரி முன்அறிவித்தல் ஏதுமின்றி விரைவில் யாழ். செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.

அரச அதிகாரிகளினதும், அரசியல் வாதிகளினதும் வாக்குறுதிகளை மட்டுமே நம்பி நீண்ட காலத்தை பயனற்றதாய் கழித்து விட்டோம்.

பொறுத்தது போதும் பொங்கியெழுவதைத் தவிர ஏழைகளாகிய எமக்கு வேறு வழியில்லைஎன மேற்படி சங்கப் பிரதிநிதி ஒருவர் வேதனையுடன் எமது நிருபரிடம் இது தொடர்பாக தன் கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை, காணாமற் போனோரின் விபரங்களை மூன்று வாரங்களுக்குள் வெளியிட வேண்டும். அன்றேல் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக கைதாகி காணாமற்போனோர் சங்கம் மூன்று வாரகால அவகாசத்துடன் இம்மாத நடுப்பகுதியில் யாழ். அரச அதிபருக்கும் கடிதம் அனுப்பியமையும்,

இற்றைவரை இழுத்தடிப்புக்கள் தவிர, உருப்படியான பதில்கள் எவையும் அவர்களுக்கு வழங்கப்படாமையும் தெரிந்ததே.

(உ-10)

### யாழ்.மாவட்டத்தில்

## தேர்தல் தொடர்பாக மக்கள் மனங்களை நாடிபிடித்தறியும் முயற்சியில் லண்டன் நிறுவனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் பத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுவின் கொள்கைகள், இலட்சியங்கள்,வேலைத்திட்டங்கள் மற்றும் மக்கள் செல்வாக்குப் பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றினை வாக்காளர் மத்தியில் நடத்துவதற்கு லண்டனில்இருக்கும்அமைப்பு ஒன்று ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்த அமைப்பினர் யாழ்ப்பாணம் வருவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர் எனவும்,

அதேசமயம், இந்த அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் சுமார் 25ஆயிரம் வாக்காளர்களை பல்வேறுஇடங்களிலும் சந்தித்து மாதிரி அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தத்திட்டமிட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இப்பணியினை, யாழ். மாவட்டத்தில் இலகுவில் அமுல்செய்யக் கூடிய ஆளணியுள்ள பொது நிறுவனம்ஒன்றினை தெரிவு செய்வது தொடர்பாகதற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியக்கிடக்கிறது.

(உ-77)

பிணியின்மை செல்வம் விளை
வின்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கிவ்
வைந்து

குறள்

# வலம்புரி

## பொதுமக்களை பாதுகாக்குக

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில், படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் ஏற்பட்ட மோதலில் அப்பாவி முஸ்லிம் குடும்பமொன்று இடையில் சிக்கி பலியாகியுள்ளது. திடீர் மோதல்களின் போது, இடையில் அகப்பட்டு உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களின் தொகை பல ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. எனினும் அத்தகைய இழப்பு தொடர்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. திடீர் மோதல்களின் போது பொதுமக்கள் சிக்கவேண்டிய சூழ்நிலை நமது நாட்டில் தவிர்க்க முடியாத ஒன்று. இந்நிலையிலேயே ஓட்டமாவடியில் படையினருக்கும், புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் அப்பாவி முஸ்லிம் குடும்பமொன்று அகப்பட்டுக் கொண்டது. கணவன், மனைவி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியாகினர்.

இத்தகைய துயரச் சம்பவங்கள் இனரீதியாக மட்டுமன்றி வருங்கால இளம் சந்ததியிடையே வக்கிரமான மனஉணர்வையும், உளத் தாக்கத்தையும் ஏற்படுத்திவிடும்.

குடும்பஅங்கத்தவர்களை இழந்ததினால் உளவியல் தாக்கத்திற்குள்ளான சிறுவர்கள் தம்மை ஆற்றுப்படுத்த வழியின்றி தவிக்கின்றனர். இதன் காரணமாக உளத்தாக்கத்திற்கு ஆளான சிறுவர்கள் எதிர்காலத்தில் பிறரில் தங்கி வாழவேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவை மட்டுமன்றி தாய் தந்தையரை இனப்போருக்கு இரையாக்கிவிட்டு அநாதைகளாக தாயின் தந்தையின் பாசத்திற்காக ஏங்குகின்ற சிறார்களின் நிலையை எண்ணும்போது மேன்மையான மனித வாழ்க்கையே வெறுப்புக்குட்படுகிறது.

எனவே மோதலில்-யுத்தத்தில் ஈடுபடுவோர் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

மோதல்களுக்குள் சிக்கி காயப்படும் பொதுமக்களுக்கு உடனடியாக மருத்துவ வசதியைப் பெற்றுக் கொள்ளும் மனிதாபிமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்றமுடியும்.

இதனை நடைமுறைப் படுத்த இலங்கையில்உள்ள சர்வதேச பொதுஅமைப்புகள் முன்வரவேண்டும்

# தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழர்களின் பண்டைய மதங்கள் பற்றிய ஆய்வு

கலாநிதி ப. புஷ்பரட்ணம்

(6)

### சைவசமயம்

இலங்கைத் தமிழரின் வழிபாடுகளுள் சிவவழிபாடுமிகத் தொன்மையானது. கி.மு. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில ஆட்சி புரிந்த மன்னர்கள சிலரின் பெயரில 'சிவ' என்றசொல்முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. கி மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் 80 கல்வெட்டுக்களில் அக்காலச் சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள 'சிவ' என்ற பெயரைப்பயன்படுத்தியுள்ளனர் இதற்குஇம்மக்கள 'சிவ' வழிபாட்டுடன்கொண்டிருந்த ஈடுபாடே காரணம் எனக் கூறப்படுகிறது. இதற்குப் பண்டையநாணயங்களில்வரும் பெயர்களும்அவற்றில் இடம் பெற்றுளளசமயச் சின்னங்களும் மேலும் சான்றாக அமைகின்றன.

### நாணயங்களில் தமிழ்ப் பெயர்கள்

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்திலும், வடஇலங்கையில் கந்தரோடை, பூநகரி போன்ற இடங்களிலும கிடைத்த கி மு 2 ஆம் நூற்றாண்டுககும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டுககும இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த நாணயங்களில் உதிரன், மகாசாதன், கபதிகஜபன், தஜபிசன், உதிஹபண போன்ற தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன. இவ்வகை நாணயங்கள சமகாலத்தில் தமிழகத்திலோ ஆல்லதுதென்னிநதியாவிலோ காணப்படவில்லை. இதுஈழத்தமிழருக்குரிய தனித்துவமான அமசம். இந்நாணயங்களில் இருந்து பண்டு தொட்டு இங்கு தமிழர் வாழ்ந்து வந்ததையும் அவர்களிடையே சுதேச அரசமரபு தோன்றி வளர்ந்ததையும அறுதியிட்டுக் கூறமுடிகிறது. இந்நாணயங்களில் காணக்கூடியஇன்னொருசிறப்புஅவர்களின் நாணயங்களை வெளியிட்டவர்களின் பெயர்களோடு அவர்கள்பின்பற்றிய மதம தொடர்பான சின்னங்களையும் அவற்றில் பொறித்திருப்பதாகும். குறிப்பாகசில நாணயங்களில் சிவ என்ற பெயர் காணப்படுகிறது. இதை வெளியிட்டவர்கள் 'சிவ' வழிபாட்டுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்பதற்கு தென்னிலங்கையில் கிடைத்த நாணயம் ஒன்றின் முன்புறத்தில் சிவனுக்குரிய நந்தி பாதமும். நாணயத்தின் பினபுறத்தில 'சிவ' (ஸிவஹ) என்ற பெயரும காணப்படுகிறது. அதே போல் கந்தரோடையில் கண்டு பிடிக்கப்பட்ட கி.பி 1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணயம் ஒன்றில் தமிழில் 'சிவ' என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது.

சிவனைக் குறிக்கும் ஆயுதங்களில் திரிசூலம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட முத்திரை நாணயங்களில் இவைகாணப்படாது, பிற்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களிலேயே காணப்படுகின்றது. இலங்கையில் இவற்றின் தொடக்கத்தைப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் குறியீடாகக் காணமுடிகிறது. காலப்போக்கில் இவற்றின் தொடர்ச்சியை பல்வேறுகால கட்டத்திற்குரிய நாணயங்களிலும் காணமுடிகிறது. தென்னிலங்கையில் கிடைத்த கி மு. 2 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழர் நாணயம் ஒன்றின் முன்புறத்தில் இடப்புறம் பார்த்து நிற்கும் மனிதனுக்கு முன்னால் திரிசூலமும், பின்புறத்தில் மல்லக திஸஹஎன்ற பெயரும் காணப்படுகின்றது. இதே பெயர்சமகாலஇலங்கை தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் மல்லன் என்று எழுதப்பட்டுளளது. ஏறததாழ இதே கால கட்டத்திலிருந்து புழக்கத்திற்கு வந்த லக்ஷ்மி உருவம பொறித்த ஈழத் தமிழரின் நாணயங்கள் சிலவற்றில் லக்ஷ்சுமியின்இடப் புறத்தில தாமரைத்தண்டுக்குப பதிலாகத் திரிசூலம் காணப்படுகிறது. பிற்காலத்தில் நல்லூர்ஆராசதானிகால நாணயஙகள சிலவற்றில் சிவனுக்குரியபிற சின்னங்களுடன் திரிசூலமும் இடம பெற்றுள்ளது.

### சிவலிங்கம்

பண்டைய தமிழ் நாணயங்களில வரும் சிவனுககுரிய சின்னங்களுள சிவலிங்கமசிறப்பாகக்குறிப்பிடத்தக்கது இதுவே சிவவடிவங்களுள மிகத்தொன்மையானதெனக் கூறப்படுகிறது. இதுகுணமும், குறியும் கடந்த பேரொளியாகிய சிவனை ஒரு குறியின் கண் வைத்து வழிபடும் பொருட்டு தோன்றிய குறியீடாகும். இதன் தொடக்ககாலச் சான்றுகள் ஈழத்தில் உருத்திரபுரம் மாமடு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் சுடுமண்களாகப் பெறபபட்டுள்ளன. மேலும் இசசின்னத்தை கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 5ஆம் நூறறாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புழக்கத்திலிருந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ள லக்ஷ்சுமி உருவம் பொறித்த நாணயங்கள் சிலவற்றில் சிறப்பாகக் காணலாம். இந்நாணயங்களின்பின் புறத்தில் சுவஸ்திகா சின்னமும் இதற்கு இடப்புறமாகக் காளையும், வலப்புறமாக ஆவுடையுடன் கூடிய லிங்கமும் காணப்படுகின்றன (புஷ்பரட்ணம 1998:1.3) சிலநாணயங்களில் லிங்கத்திற்குப் பதிலாக பூரணகும்பமும் வேறுசில நாணயங்களில் சிவனுக்குரிய திரிசூலமும், மழுவும காணப்படுகின்றன. இவையிரண்டும் சிவனுக்குரிய முக்கிய படைக்கலன்களாகும். புறநானூறு சிவபிரானை 'ஏற்றுவன் உயரிய எரிமருள் அவிர்சடைமாற்றருங்கணிச்சி மணிமிடற்றோன்' என்றும், சீற்றம் நிறைந்த கூற்றம் என்றும்ஒரே கணை கொண்டுமுப்புரத்தை எரித்துஅமரர்க்குவெற்றிதந்த கறைமிடற்று அண்ணல் என்றும் கூறுகிறது. (புறம்54-55)

காலத்தால் முந்திய கல்லில் வடிவமைக்கப்பட்ட ஆவுடையுடன் கூடிய சிவலிங்கமமுதன்முதலில் மாதோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கண்டுபிடிககப்பட்டதாகும். கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்குரிய இச்சிவலிங்கம் பல்லவக் கலைமரபுக்குரியதாகப் பலர் கூறினாலும் இவ்வளவு பெரிய லிங்கம் தமிழகத்தில் உளள பல்லவர் கால ஆலயங்களில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை பூநகரி அரசபுரத்திற்கு அண்மையில் உள்ள கோயில காடு என்ற இடத்திலிருந்து ஆவுடையுடன் கூடிய இலிங்கம ஒன்று பல ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கபபட்டதாகத் தெரிகிறது. இவ் விலிங்கம் கண்டுபிடிக்கபபட்ட காட்டுப்பகுதி பல நூற்றாண்டுகள் மக்கள் வாழ்ந்த பகுதியாக இருப்பதுடன், அவ்விடங்களில் பண்டைய கால கட்டிட அழிபாட்டுக்குரிய சான்றுகள் காணப்படுவதால் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இலிங்கம் மிகப் பழமையானதெனக் கருத இடமுண்டு. தற்போதுஇவ்விலிங்கமவவுனியாவில் உளள ஒரு சிவன் கோயிலில் வைத்து வழிபடப் படுவதாக அறிகிறோம். கி பி. 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற நல்லூர் இராசதானிகாலத்தில்இருந்த சிவ ஆலயங்கள் பற்றித தமிழ் இலக்கியங்களில் சில குறிப்புக்கள் காணப்படுவதோடு அவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களிலும் இவ்வழிபாட்டின் முக்கித்துவத்தைப் பிரதிபலிக்கும் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை அவ்வரசு காலத்திற்குரியதென உறுதிப் படுத்தக் கூடிய சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

### நந்தி

சிவனுக்குரிய வாகனமாக நந்தி (காளை) காணபபடுகிறது. பண்டைய கால இந்திய நாணயங்கள் பலவற்றில் தனித்தும், பிற சின்னங்களுடன் சேர்ந்தும காளை பொறிக்கப்பட்டுள்ளது. சங்ககால மூவேந்தர் வெளியிட்ட நாணயங்கள் பலவற்றில் காளை முக்கிய சின்னமாக இடம்பெற்றுள்ளது. இம்மரபு இலங்கைததமிழர்வெளியிட்ட நாணயங்களிலும் காணபபடுகிறது. கி. மு. 2 ஆம நூற்றாண்டுக்குரிய பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் சிலவறறில் நிற்கும் நிலையிலும, அமர்நத நிலையிலும் காளை உருவம் காணப்படுகிறது. சமகாலத் தமிழக நாணயங்களில் பெரும்பாலும் நிற்கும நிலையில் காளைபொறிக்கப்பட்டுளளது. ஆனால் ஈழத்தில் அமர்நத நிலையிலும காணபபடுகிறது. இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அந நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்கள பல தென்னிலங்கையிலகண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த அமசம் சமகாலத்திலிருந்து புழக்கத்தில் வந்த லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்களில் மிகத தத்துரூபமாக பொறிக்கப்பட்டுளளது. பொதுவாக இந்நாணயங்களின் பின்புறத்தில சுவஸ்திகாவுக்கு வலப்புறமாகக் காளை உருவம் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. கி.மு.3- 2 ஆம் நூறறாண்டில் அநுராதபுரத்தில ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள வெளியிட்டதாகக் கருதப்படும் சதுரவடிவிலமைந்த செப்பு நாணயங்களில் பூரணகும்பம் அல்லது பலிபீடம் போன்ற சின்னத்திற்கு முன்னால் நிறகும நிலையில் காளை உருவம காணப்படுகிறது. (தொடரும்)

## தினசரி தியானம்

## செயலும சாந்தியும்

சித்த நினைவுஞ் செயுஞ் செயலும் நீயெனவாழ்
உத்தமர்கட் காண உறவே பராபரமே.

**தாயுமானவர்**

இடையறாது வினையாற்றுவதும், மனதுயாண்டும் அமைதியுற்றிருப்பதும் ஒன்று சேர்ந்து நல்ல வழிபாடு ஆகிறது.

ஹிருதயம் ஓயாது அடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் அது களைப்புறுவதில்லை. உடல் அங்ஙனம் உழைத்துக் கொண்டிருக்கட்டும. மனது சாந்தியில் நிலைத்திருந்தால் உழைக்கிற உடலுக்கு ஆயாசம் உண்டாகாது. வினையாற்றுதலும் விச்ராந்தியும் சேர்ந்தே நிகழ்கின்றன.

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்**

## பாலம் திருத்தம்

(அளவெட்டி)

அளவெட்டி பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் திருத்தஞ் செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் இப்பாலம் சேதமுற்று இருந்தபடியால் பொதுமக்கள் வேறு பாதையூடாகவே பிரயாணங்களை மேற் கொண்டு வந்தனர். (செ-237)

## பதவிஉயர்வு

(கொழும்புத்துறை)

யாழ்மாவட்டக்கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவுப் பரிசோதகர்களாக சேவையாற்றும்பின்வருவோர் தரம்1ற்கு தரமஉயர்த்தப்பட்டுளளனர்.

க.சின்னராசா, சு.கணேசு, எஸ்.பத்மசோதி,வி.க. அருந்தவநாதன், எஸ்.யோகேந்திரராஜா,திருமதி செ.அழகேந்திரராஜா. (எ-223)

## நல்லின விதைகள் விற்பனை

(நவக்கிரி)

நல்லினவெண்டி,பயிற்றை, புடோல், பாகல், கத்தரி,மிளகாய், கீரை விதைகளுடமேல்நாட்டுகரட்,லீக்ஸ், கோவாவிதைகளும விற்பனைக்குள்ளாவதாகவும் விவசாயிகள இவற்றைப் பெற்றுப் பயனடையலாம் எனவும புத்தூர் கமநல கேந்திர நிலையம அறிவித்துள்ளது.

தவிர ,விவசாயிகள் நலன் கருதி உழவு இயந்திரம் இருசில்லு உழவு இயந்திரம் என்பன வாடகைக்கு விடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-233)

## கிரிக்கெற் சுற்றுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

நல்லூர் நொதேன் விளையாட்டுக் கழகத்தின் 'பராபரம்' வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது. [ந]

### ஐ-தே-க - - -

இதனையொட்டி நல்லூர்ப் பகுதியெங்கும் பச்சை நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. (இ-10-106)

### விடுதலைப்...

வைத்திய சாலை நவீன மயப்படுத்தப்படும்.

இவை நிறைவேற்றப்படாது போகுமானால் ஆட்சிப் பீடத்தை மாற்றும் முதல் உறுப்பினர் மகேஸ்வரன் தான் என்று அவர் கூறினார். (இ-10-106)

# வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்க படையினர் மீண்டும் தடை விதிப்பு

## வழங்கிய அனுமதி 2 தினங்களில் வாபஸ்

(மந்திகை)

வடமராட்சி கடற்பிரதேசத்தில் அம்பன் தொடக்கம் தொண்டமானாறுக்கு அருகில் உள்ள கடற்பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்கு மீண்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளை வல்வெட்டித்துறை சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு அழைத்து படைத்தரப்பினர் இந்த அவசர உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த சனியன்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டி. எஸ். கே. விஜயசூரியா தலைமையில் நடைபெற்ற மீனவப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து மேற்படி பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதும் ஞாயிறு முதல் மீனவர்கள்தம் பணியை தடையின்றித் தொடர்ந்ததும் தெரிந்ததே.

படைத்தரப்பின் அறிவிப்புகளில் இவ்வாறு அடிக்கடி மாற்றம் ஏற்படுவது குறித்து மீனவர் தரப்பில் பெருத்த ஏமாற்றமும், கவலையும் வெளியிடப்பட்டுள்ளன. (உ- 23)

### குண்டு

செல்ல இனுமதிக்கப்பட்டனர்.

சித்திராலேன் அண்டர்சன் தொடர்மாடியில் இரண்டு புலி உறுப்பினர்கள் இருந்ததாகவும் அங்கு சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்தே அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### பிரதிநிதித்துவத்தை---

தற்கு ரவூப்ஹகீம் செயற்பட்டு வருகிறார். முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அரசியல் பரிபக்குவம்இல்லை. இதனால் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவதில் அவர்களுக்கு அக்கறை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)


G.A.Q ,B.A. Part I,II
யாழ், பேரதனை
G. A. Q. - 2002
A/L 2002, 2003
தமிழ்; K. தர்மராஜா
அனைத்து விரிவுரைகளும்
இன்று
31-10-2001
மாலை 3மணி முதல்
ஆரம்பமாகின்றன.
திகழ்
கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்
(கி-2804)


### எண்ணெய் - --

கிடைத்துள்ளது.

கரும்புலித் தாக்குதலுக்கு இலக்கான எண்ணெய்க் கப்பலில் இருந்தவர்களை காப்பாற்றவும், தீயை அணைக்கவும்,திருமலையில் இருந்தும், காங்கேசன் துறையில் இருந்தும் கடற்படையினரின் அதிவேக டோறாப்படகுகள் பருத்தித்துறைக் கடற்பரப்பிற்கு விரைந்துசென்றுள்ளது. அதேவேளை கடற்படையினர் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுத்த நிலையில் இருப்பதாகவும் இராணுவ தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எரிந்து கொண்டிருக்கும் கப்பலின் தீயை அணைப்பதற்கு தீயணைப்புப் படைப் பிரிவினர் தீவிர முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதும் தீயணைக்கப்படாமல் கடற்பிரதேசம் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளிப்பதாக கரையோரவாசிகள் எமதுசெய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

எரிந்துகொண்டிருக்கும் கப்பலில் இருந்த கப்பல் சிப்பந்திகள் சிலரும் கடற்படையினர் சிலரும் காப்பாற்றப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்புச் செய்திகள தெரிவிக்கின்றன.

இதேவேளை எரிந்து கொண்டிருக்கும் கப்பலை மீட்பதற்கு இராணுவதரப்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்எதுவும் பலனளிக்கவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளபோதிலும் மீட்புப் பணிகள் தொடர்வதாக செய்திகள் மேலும்தெரிவிக்கின்றன. (வ23,43)

## மரண அறிவித்தல்

### திரு.வி. சுந்தாசுந்தரலிங்கம்

(இலங்கை வானொலி, லண்டன் பி. பி சி, சென்னை ஆகியவற்றின் ஓய்வு பெற்ற ஒலிபரப்பாளரும் இலங்கை நாடாளுமன்ற சமகால மொழிபெயர்ப்பாளரும்)

சாவகச்சேரியைச் சேர்ந்த வி.சுந்தா சுந்தரலிங்கம் அவர்கள் (29-10-2001) திங்கட் கிழமை அதிகாலை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம் சிறாம்பியடியைச் சேர்ந்த பராசக்தி (இளைப்பாறிய ஆசிரியை யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரிகொழும்பு) அவர்களின் அன்புக் கணவரும் சுபத்திராவின் பாச மிகு தந்தையாரும் சஞ்சயனின் அன்பு மாமனாரும் சேந்தன், சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (30-10-2001) செவ்வாய்க் கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
அராலி கிழக்கு
வட்டுக்கோட்டை

தகவல்
ஐ. கணேசலிங்கம்
(மைத்துனர்)
ஓய்வுபெற்ற முகாமையாளர்
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.

(3901)

### முக்கோண

எஸ்.காண்டீபன், பி.ஜெய... டன்,பி.லவீந்திரா, ஜ.ஜெ... தீபன், எஸ்.கிருஷ்ணராஜா, பி.பிருந்தாவன்;

### வவுனியா மாவட்ட அணி

ஆர்.ரொபின் சன்றோய், (தலைவர்) எஸ்.கௌசிகன், என்.சிசிரகுமர, பி.வி ஜ... சிங்க,பி.பிறேம ஜீவ, ஆ... ஜெயசூரியா, ஐ.ரமணன்,வ... மிதுலன் கே. எஸ்.முகுந்த... . ரி.ஜெதார்த்தனன், சி... மோகன்குமார், சி.விநோ... குமார், எஸ்.திருச்செல்வம்...

இன்றைய நிகழ்வில் பிரத... விருந்தினராக யாழ்.மத்தி... கல்லூரி அதிபரும்,யாழ்பா... சாலைகள் கிரிக்கெட் சங்... தலைவருமான கே.இர... துரையும் ,கௌரவ விருந்... னராக யாழ்.பாடசாலைக... கிரிக்கெட் சங்க செய... சிவபாலகிருஷ்ணனும் கலந்... கொள்ளவுள்ளனர். (உ-239-223)

### கரும்புலித் - - -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா கடற்படையின ருக்கு தேவையான எரி பொருள் கப்பல் மீது மேற்... கொளளப்பட்ட இத்தாக்கு... தல்சம்பவமானது 2-10-2001 ஆண்டு தமிழீழ கடற்பரப் பல் விநியோக நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த விடுத... லைப்புலிகளின் படகுமீது சிறிலங்கா கடற்படையின ரால் மேற்கொளளப்பட்ட தாக்குதலின்போது வீர... சாவடைந்த நான்கு கட... கரும்புலிகளினதும் இரு கட... புலிகளினதும் நினைவா... நடத்தப்பட்டதாகவும் வி... தலைப் புலிகள் தெரிவி... துள்ளனர்.

### நான்கு கரும்புலிகள் வீரச்சாவு

கடற்படையின் எரிபொரு... கப்பல் மீது விடுதலைப்பு... கள் மேற்கொண்டகரும்புலி... தாக்குதலின்போது த... தரப்பில் இரண்டு ஆண்க... கரும்புலிகளும், இரு பெ... கடற் கருமபுலிகளும வீ... சாவடைந்துள்ளதாக தமி... விடுதலைப்புலிகள் நே... நள்ளிரவு உத்தியோக பூ... மாக அறிவித்துள்ளனர்.

நல்லூர்க்கந்தன் துணை

# ஐக்கிய தேசியக் கட்சி யாழ். மாவட்டம்

# கொள்கை விளக்கமும் பொதுக் கூட்டமும்

**தலைமை : தியாகராசா மகேஸ்வரன்**
(முதன்மை வேட்பாளரும் ஐக்கிய தேசியக்கட்சியின்
முன்னாள் யாழ்மாவட்டநாடாளுமன்ற உறுப்பினரும்)

**இடம்: நல்லூர்க் கந்தன் ஆலய முன்றல்**

**காலம் : 31-10-2001 இன்று**
**பிற்பகல் 4 மணி**

குறிப்பு: எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவர்

**கட்சியின் ஆதரவாளர்கள் அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் வருக வருகவென அன்புடன் அழைக்கின்றேன்**

ஐக்கிய தேசியக்கட்சியின்
யானைச் சின்னத்திற்கே
வாக்களியுங்கள்
(கி-2805)

**X**

**தியாகராசா மகேஸ்வரன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
ஐ. தே. க.)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஒக்ரோபர்31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.